IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 63/2024

சாட்சி : PW1

பெயர் : கலைச்செல்வி தேதி: 26-06-2025

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2022-ம் வருடம் நான் பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்றேன். பத்திரத்தில் பத்திரவு பதிவு அலுவலகத்தில் நான் கையெழுத்து போட்டேன். பத்திரத்தை பத்திர பதிவு அலுவலகத்தில் படித்துக்காட்டவில்லை. நானும் படித்து பார்க்கவில்லை. என்னுடைய முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளேன். தாவாவிலும் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளேன்.

பத்திர பதிவு அலுவலகத்திற்கு என் அண்ணன், தம்பிகளுடன் சென்றபோது என்ன காரணம் சொல்லி அழைத்து சென்றார்கள் என்றால்? என் அண்ணன் தம்பிகள் கடை வைத்துள்ளார்கள். அதை விரிவாக்கம் செய்வதற்காக அழைத்து செல்வதாக சொன்னார்கள். அவர்கள் வைத்துள்ள கடையின் சர்வே எண் தெரியாது. கடை விஷயமாகத்தான் எழுதி, அன்றைய தினம் பதிவு செய்தார்கள்.

அந்த பத்திர பதிவை அதாவது கடை சம்மந்தமாக பதிவு செய்யப்பட்டதை ரத்து செய்யக்கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தை 2024ல் நகல் போட்டு பார்த்தேன். அந்த நகலில் பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. என் கணவர் பத்தாம் வகுப்பு படித்துள்ளார்.

என் கணவர் வா.சா.ஆ-9 பாகப்பிரிவினை பத்திரத்தில் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். என் கணவரும் வா.சா.ஆ-9 ஐ படித்து பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படுகின்ற ஆவணத்தில் என் பெயர் காணப்படுகிறது. அது என் மனுவின் பெயரில் ச.நெ. 1412C2 என்ற சொத்தை 0.2.00 ஹெக்டர் நிலத்தை என் பெயரில் 30.11.2023 ல் பட்டா மாற்றம் செய்யப்பட்ட பட்டா என்று சொன்னால் சரிதான். அந்த பட்டாவின் இணையதள நகல் **பி.வா.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

அவ்வாறே எனது சகோதரி ஜோதி, க/பெ. முருகன் என்பவரும் ச.நெ. 1412C2 என்ற சொத்தை 0.2.00 ஹெக்டர் நிலத்தை அவரது பெயரில் 30.11.2023 ல் பட்டா மாற்றம் செய்யப்பட்ட பட்டா என்று சொன்னால் சரிதான். அந்த பட்டாவின் இணையதள நகல் **பி.வா.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

பி.வா.சா.ஆ-1 மற்றும் பி.வா.சா.ஆ-2 ல் காணப்பட்ட சொத்துக்கள் வா.சா.ஆ-9 ல் காணப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-1 மற்றும் பி.வா.சா.ஆ-2 ல் காணப்பட்ட சொத்துக்கள் எனக்கும், என் சகோதர, சகோதரிகள் இடையே பாகப்பிரிவினையில் பிரிக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். அவ்வாறே 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் வா.சா.ஆ-9 ல் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் பிரித்து ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

**ஒம்/- S. எழில் வேலவன்**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**சேலம்.**